# விரிவுபடுத்தப்பட்ட முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்: அமைச்சர்கள் பங்கேற்பு!



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் காலை சிற்றுண்டி திட்டம் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.அதன்படி நெல்லை மாவட்டம் இராதாபுரம் சட்டமன்றத் தொகுதி அலுவலகம் எதிரில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் காலை சிற்றுண்டி உணவுத் திட்டத்தை சட்டப் பேரவை தலைவர் மு.அப்பாவு மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன் முன்னிலையில் துவக்கி வைத்தார். அதன்பின் மாணவிகளுடன் அமர்ந்து பேரவைத் தலைவர் மு.அப்பாவு காலை சிற்றுண்டி அருந்தினார். நிகழ்வில் இராதாபுரம் ஒன்றியச் செயலாளர் ஜோசப் பெல்சி, மாவட்ட திட்ட இயக்குனர் சுரேஷ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முழுவதும், 25.08.2023, வெள்ளிக்கிழமை, காலை 8 மணியளவில், தமிழ்நாடு முதலமைச்சரும், கழக தலைவருமான தளபதி, மு.க.ஸ்டாலின் அவர்கள், மாநிலம் முழுவதும் தொடக்கப் பள்ளி மாணவர்களுக்கு காலை உணவு வழங்கும் திட்டத்தை, திருக்குவளையில் துவக்கி வைத்தார். இதனையடுத்து கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி சட்டமன்றத் தொகுதி, சி.என்பாளையம் ஊராட்சியில், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் கலந்து கொண்டு காலை உணவு திட்டத்தை துவக்கி வைத்தார். பின்னர் மாணவர்களுக்கு புத்தக பைகளை வழங்கினார். பள்ளி வளாகத்தில் மரக்கன்றுகளை நட்டார். மாவட்ட ஆட்சியர் அ.அருண்தம்புராஜ், மாவட்ட வருவாய் அலுவலர் ம.ராஜசேகரன் உள்ளிட்ட அரசு அதிகாரிகள், ஒன்றிய கழக நிர்வாகிகள், மாணவமாணவிகள், ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மாநிலம் முழுவதும் காலை சிற்றுண்டி உணவு திட்டத்தினை விரிவாக்கம் செய்ததை தொடர்ந்து ஈரோடு மாவட்டம் வெள்ளோடு அரசு பள்ளியில் தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி துவங்கி வைத்தார். நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜகோபால் சுன்கரா, சென்னிமலை ஒன்றிய செயலாளர் செங்கோட்டையன், சென்னிமலை ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் காயத்ரி இளங்கோ உள்ளிட்ட ஆசிரியர்கள், துறை சார்ந்த அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.



சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன், நீலகிரி மாவட்டம், குன்னூர் சட்டமன்றத் தொகுதி, பெட்டட்டி அரசு துவக்கப்பள்ளி யில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தினை துவக்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட கண்காணிப்பு அலுவலர், போக்குவரத்து துறை சிறப்பு செயலாளர் தி.ந.வெங்கடேஷ், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி. கீர்த்தி பிரியதர்ஷினி உள்ளிட்ட மாவட்ட அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி இராணிப்பேட்டை மாவட்டம் வாலாஜா ஊராட்சி ஒன்றியம் சென்ன சமுத்திரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் நேற்று (25.08.2023) 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை படிக்கும் 93 குழந்தை களுக்கு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தினை தொடங்கி வைத்து குழந்தைகளுக்கு உணவினை பரிமாறினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ச.வளர்மதி, திட்ட இயக்குநர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திருமதி. க.லோக நாயகி, திட்ட இயக்குநர் மகளிர் திட்டம் ரவிச்சந்திரன், ஒன்றியக் குழுத் தலைவர் சே.வெங்கட்ரமணன் மற்றும் பலர் உள்ளனர்.



முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள் முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தினை மாநிலம் முழுவதும் விரிவாக்கம் செய்திடும் வகையில் தொடங்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் அமைச்சர்களும் சட்டமன்ற உறுப்பினர் களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளும் துவக்கி வைக்க உள்ள நிலையில் திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருவெறும்பூர் தொகுதி போலீஸ் காலனி நவல்பட்டு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் நடைபெறும் முதலமைச்சரின் காலை உணவு திட்ட விழாவில் கலந்து கொண்டு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி துவக்கி வைத்தார். இந்நிகழ்வில் சேர்மன் சத்யா கோவிந்தராஜ், ஒன்றிய கழகச் செயலாளர் கங்காதரன், பொதுக்குழு உறுப்பினர் நவல்பட்டு சண்முகம், பள்ளியின் தலைமை ஆசிரியர் ஆசிரியர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை கடலூர் மேற்கு மாவட்டம் திட்டக்குடி சட்டமன்றத் தொகுதி மங்களூர் கிழக்கு ஒன்றியம் பட்டூர் கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் தொடங்கி வைத்தார். உடன் ஆசிரியர்கள், மங்களூர் கிழக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் பட்டூர் வீ.அமிர்தலிங்கம், திட்டகுடி நகரக் கழகச் செயலாளர் வி.பி.பி.பரமகுரு உள்ளனர்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இந்தியாவிலேயே முதல் முறையாக தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு தொடக் கப் பள்ளிகளிலும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை விரிவுப் படுத்தி 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் பயன்பெறும் வகையில் தொடங்கி வைத்ததை தொடர்ந்து, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் என்.கயல் விழி செல்வராஜ் நேற்று (25.8.2023) விரிவாக்கம் செய்யப்பட்ட முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை திருப்பூர் மாவட்டம், தாராபுரம் ஊராட்சி ஒன்றியம், அலங்கியம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் உணவு பரிமாறி தொடங்கி வைத்து மாணவ, மாணவியர்களுடன் கலந்துரையாடி உணவு அருந்தினார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் த.ப.ஜெய்பீம் உள்ளார்.